**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC128/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-5/PW- 4 | Village: | |
| Name | : ராஜ்குமார் | Age | : 24 |
| Father's/Husband's Name | : ஏசுராஜ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/11/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சாத்தனூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது கான்கிரிட் போடும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வேலைக்கு சென்றுவிட்டு இரவு சுமார் 11.30 மணியளவில் வீட்டிற்கு வந்து தூங்கி விட்டேன். மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில் செங்கோல் மேரி வீட்டை தாண்டியுள்ள மளிகை கடைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தேன். அப்போது செங்கோல்மேரி வீட்டு வாசலில் போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு யார் யாருடைய வீடு பக்கத்தில் உள்ளது என்று படம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் கையொப்பபம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள

2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் நான் போலிசாரிடம் கேட்டேன். போலிசார் அங்கு வந்து விசாரித்ததற்காக சாட்சி கையொப்பபம் போடுமாறு கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் காகிதத்தில் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் காகிதம் வெற்று காகிதம் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நாள் நேரத்தில் போலிசார் வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றாலும், நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அ.சா.,1 எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம் (நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC128/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 3 | Village: | |
| Name | : சர்மிளா | Age | : 38 |
| Father's/Husband's Name | : செல்வம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/11/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சாத்தனூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது மாமியார் மற்றும் மாமனார் ஆவார்கள். எதிரி ஆரோக்கியதாஸை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 3 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் வீட்டில் சமைத்து கொண்டிருந்தேன். என் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தபோது ஆரோக்கியதாஸ் தேவடியா, குச்சிக்காரி என்று திட்டி கொண்டிருந்தார். பிறகு கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1 ஐ கழுத்தில் வெட்ட வந்தபோது , அ.சா.1 தடுத்ததால் அவரது வலது மற்றும் இடது கையில் கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது. அதன்பிறகு எனது ஊர்காரர்கள் வந்து அவரை இழுத்து சென்று விட்டார்கள். அதன்பிறகு நான் காயம் பட்ட

எனது மாமியாரை ஒரு போக்கு ஆட்டோ மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் மறுநாள் மருத்துவமனையில் வைத்து விசாரனை செய்தார்கள். எனது ஊருக்கு அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனை திருவிடைமருதூரில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து திருநீலக்குடி காவல் நிலையம் சுமார் 7 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். கும்பகோணம் அரசு மருத்துமனைக்கு எங்கள் ஊரிலிருந்து ஒரு மணிநேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தபிறகு மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது வீட்டை சுற்றி காமராஜர், சதிஷ், மணிவாசகம், ராஜேந்திரன், சகாயராஜ், மணிகண்டன் ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை நான் மருத்துவமனையில் இருந்தேன். மேற்படி நபர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அங்கு இருந்தார்கள் என்றால் இருந்தார்கள். ஆரோக்கியதாஸ்க்கும் எங்களுக்கும் இடையே இடபிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும் எதிரி வீட்டிற்கும் சந்து பிரச்சனை இருந்து வருவதால் எதிரி மீது அ.சா.1 பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் , இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம் (நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC128/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-2/PW- 2 | Village: | |
| Name | : அருள்தாஸ் | Age | : 70 |
| Father's/Husband's Name | : ரபேல் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/11/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சாத்தனூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். எதிரி ஆரோக்கியதாஸை எனக்கு தெரியும். கடந்த 2020 ஜூன் மாதம் தேதி சரியாக ஞாபகமில்லை. இரவு சுமார் 08.30 மணியளவில் வீட்டில் உடல் நிலை சரியில்லாமல் படுத்திருந்தேன். என் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தபோது ஆரோக்கியதாஸ் கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1 ஐ வெட்ட வந்தார். அப்போது எனது மனைவி கத்தியை பிடித்ததால் அவரது வலது மற்றும் இடது கை கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது. பிறகு உன் குடும்பத்தையே காலி செய்வேன் என்று மிரட்டினார். அதன்பிறகு எனது மருமகள்

சர்மிளா காயம் பட்ட எனது மனைவியை ஒரு போக்கு ஆட்டோ மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எனது ஊருக்கு அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனை திருவிடைமருதூரில் உள்ளது என்றால் ஆடுதுறையிலும் உள்ளது. என்னுடைய வீட்டிலிருந்து திருநீலக்குடி காவல் நிலையம் சுமார் 7 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். வாகனத்தில் சென்றால் சுமார் அரைமணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். எனது வீட்டை சுற்றி காமராஜர், சதிஷ், மணிவாசகம், ராஜேந்திரன், சகாயராஜ், மணிகண்டன் ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் அவர்கள் ஊரில் இல்லை. கேரளாவிற்கு சென்றுவிட்டார்கள். ஆரோக்கியதாஸ்க்கும் எங்களுக்கும் இடையே இடபிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும் எதிரி வீட்டிற்கும் சந்து பிரச்சனை இருந்து வருவதால் எதிரி மீது அ.சா.1 பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் , இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம் (நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC128/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : செங்கோல்மேரி | Age | : 70 |
| Father's/Husband's Name | : அருள்தாஸ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of** 22/11/2023

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சாத்தனூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி ஆரோக்கியதாஸை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 09.00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் இருந்தபோது ஆரோக்கியதாஸ் என் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தார். அப்போது நாய் குரைத்தது நான் நாயை விரட்டிவிட்டேன். அப்போது எதிரி தேவடியா, குச்சிக்காரி என்று வித்தியாசமான வார்த்தைகளார் அசிங்கமாக திட்டினார். அதன் பிறகு எதிரி கத்தியை வைத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் என்று கூறி ஓங்கி வெட்ட வந்தார். நான் தடுத்தபோது எனது வலது மற்றும் இடது கை கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது.

அதன்பிறகு நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை நான் வைத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

பட்டியல் சாட்சி 2 அருள்தாஸ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கணவர் ஆவார். சாட்சி சர்மிளா எனது மருமகள் என்றால் சரிதான். சாட்சி மரியதாஸ் எனது உறவினர் என்றால் சரியல்ல. நாய் குரைத்தது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்பதை புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கும் ஆரோக்கியதாஸ்க்கும் இடையே முன்விரோதம் இருந்து வருவதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த முன் விரோதம் தொடர்பாக வேறு எதுவும் வழக்கு உள்ளதா என்றால் இல்லை. வெறும் வாய்தகராறு தான். போலிசார் என்னிடம் எப்போது புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் மருத்துவமனையில் சேர்ந்த மறுநாள் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலம் நான் எழுதினேனா என்றால் போலிசார் எழுதினார்கள். அதில் என்ன விவரம் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் போலிசார் படித்துக்காட்டவில்லை. என்னுடைய வீட்டிலிருந்து திருநீலக்குடி காவல் நிலையம் சுமார் 7 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். வாகனத்தில் சென்றால் சுமார் அரைமணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். எனது வீட்டை சுற்றி காமராஜர், சதிஷ், மணிவாசகம், ராஜேந்திரன், சகாயராஜ், மணிகண்டன் ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் மருத்துவமனையில் இருந்தேன். சம்பவ நடந்த எனது ஊரிலிருந்து சுமார் ஒரு மணிநேரத்தில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். ஆரோக்கியதாஸ் எனக்கு பங்காளி உறவு முறை என்றால் சரியல்ல. நான்

சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும் எதிரி வீட்டிற்கும் சந்து பிரச்சனை இருந்து வருவதால் எதிரி மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் , இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம் (நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**